28401

OL/2023(2024)/62/T-I, II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 62 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| குடியியற் கல்வி | I, II |
| Civic Education | I, II |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## குடியியற் கல்வி I

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நேரடி சனநாயகம் நிலவிய எதென்ஸ் நகர ஆட்சியில் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு உரித்துடைய குழுவினர்

(1) பெண்கள் (2) பிரசாவுரிமையுடைய ஆண்கள்
(3) வெளிநாட்டவர் (4) அரச சேவையாளர்

**2.** பாராளுமன்ற அரசாங்க முறையின் அரசியல் நிறைவேற்றுத்துறையாவது,

(1) சனாதிபதி தலைமையிலான அமைச்சரவையாகும்.
(2) பிரதம மந்திரி தலைமையிலான அமைச்சரவையாகும்.
(3) சபாநாயகர் தலைமையிலான அமைச்சரவையாகும்.
(4) சபை முதல்வர் தலைமையிலான அமைச்சரவையாகும்.

**3.** பன்மைப்பண்பாட்டுச் சமூகத்தில் பிரசைகள் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்பு பின்வருவனவற்றுள் எது?

(1) ஓரினத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல்
(2) வேற்று சமயத்தைத் தழுவுதலும் பின்பற்றலும்
(3) பிறரின் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் தொடர்பாடலுக்குட்படுத்தல்
(4) ஏனையோருடன் மோதல் ஏற்படாதவாறு வாழுதல்

**4.** இலங்கையில் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான சட்டம் எது?

(1) தேசவழமைச் சட்டம் (2) கண்டியச் சட்டம்
(3) முஸ்லீம் சட்டம் (4) உரோமன் டச்சுச் சட்டம்

**5.** பின்வருவனவற்றுள் மாகாண சபை ஆளுநரின் ஒரு அதிகாரமாக அமைவது எது?

(1) மாகாண சபை நியதிச்சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்
(2) மாகாண சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குதல்
(3) மாகாண சபையின் வரவுசெலவுத்திட்ட ஆவணங்களைத் தயாரித்தல்
(4) மாகாண சபையின் பொருளாதாரத் திட்டங்களைத் தயாரித்தல்

**6.** பின்வரும் எப் பதவி நிலை பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமுடையது?

(1) பிரதமர் (2) சபாநாயகர் (3) சனாதிபதி (4) சபை முதல்வர்

**7.** இலங்கையில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்டுள்ள வழிவகை ஒன்று

(1) பெண்களுக்குத் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பை வழங்கியமை
(2) அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் மற்றும் பெண்களுக்கான பிரிவைத் தாபித்தமை
(3) பெண்களுக்கான சுகாதார மருத்துவ நிலையங்களை நடாத்துதல்
(4) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியமை

[பக். 2 ஐப் பார்க்க

8. சமூக சூழலுக்கு ஏற்படும் தீங்கின் விளைவாக அமைவது,
(1) குடும்பம் சீரகுலைதல்
(2) உக்காத கழிவுகள் சேருதல்
(3) தொற்றுநோய்கள் பரவுதல்
(4) விவசாய அறுவடை குறைதல்

9. கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அண்மையில் இலங்கைக்கு உதவி வழங்கிய சர்வதேச நிறுவனம் எது?
(1) உலக வங்கி
(2) சர்வதேச நாணய நிதியம்
(3) ஆசிய அபிவிருத்தி வங்கி
(4) சீன அபிவிருத்தி வங்கி

10. தேர்தல் தொகுதிக்கமைவாக பாராளுமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தவனாலேற்படும் அனுகூலம்,
(1) சுதந்திரமான தேர்தலை நடாத்துதல்
(2) சமாதானமான சூழலை உருவாக்குதல்
(3) சனநாயக விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்
(4) பிரதேச அபிவிருத்திக்கு இடமளித்தல்

11. தனிப்பட்ட இரு குழுக்களுக்கிடையில் ஏற்படும் பிணக்கைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் சட்டம் எது?
(1) கண்டியச் சட்டம் (2) குற்றவியல் சட்டம் (3) சிவில் சட்டம் (4) உரோமன் டச்சு சட்டம்

12. நாட்டின் சட்டத்துறைக்குரிய பணியைக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) சட்டமியற்றல்
(2) சட்டத்துக்கு பொருள் கோடச்செய்தல்
(3) சட்டத்தை அமுல்படுத்தல்
(4) சட்டத்தை நிறைவேற்றல்

13. மோதல் தீர்வின் போது 'கலந்துரையாடல்' முறையைப் பயன்படுத்துவதால் இரு தரப்பினருக்கும் ஏற்படும் நன்மை,
(1) முறைப்பாட்டாளருக்கு வெற்றி கிடைத்தல்
(2) வெற்றி - வெற்றி தீர்வு கிடைத்தல்
(3) பாதிக்கப்பட்டவருக்கு வெற்றி கிடைத்தல்
(4) குறைந்த காலத்தில் தீர்வு கிடைத்தல்

14. பின்வரும் எவ்வகைப் பொருளாதார முறைமையில் போட்டிச் சந்தையை அவதானிக்கலாம்?
(1) முதலாளித்துவ பொருளாதார முறை
(2) சமவுடைமைப் பொருளாதார முறை
(3) கலப்புப் பொருளாதார முறை
(4) சந்தைப் பொருளாதார முறை

15. நிலைமாறும் பொருளாதார முறையில் அவதானிக்கக்கூடிய ஒரு அம்சத்தைத் தெரிவுசெய்க.
(1) அரச முயற்சியாண்மைகளை ஊக்குவித்தல்
(2) அனைத்து சொத்துகளும் அரசுடைமையாகக் கருதப்படல்
(3) வணிகங்களுக்கு மானியம் வழங்குதல்
(4) நட்டமடையும் அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தல்

16. மனித உரிமைகளில் நாடுகள் தமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கக்கூடிய உரிமைகளாவன
(1) மனித உரிமைகள்
(2) சிறுவர் உரிமைகள்
(3) அடிப்படை உரிமைகள்
(4) பெண்கள் உரிமைகள்

17. பின்வரும் பணிகளில் மாநகர சபையின் அதிகாரத்திற்கு **உட்படாதது** எது?
(1) வீதிகளுக்கு மின் விளக்கைப் பொருத்துதல்
(2) நூலக வசதியேற்படுத்தல்
(3) அளவை நிறுவை நடவடிக்கைகளை நிர்வகித்தல்
(4) மாநகர சபையின் எல்லையை நிர்ணயித்தல்

18. மனித நடவடிக்கைகளின் விளைவாக சூழல்தொகுதியில் ஏற்பட்ட மாற்றத்தினால் தோன்றியுள்ள சூழல்சார் பிரச்சினை எது?
(1) நாடுகளுக்கிடையே யுத்தம் ஏற்படல்
(2) புவி வெப்பமடைதல் அதிகரித்தல்
(3) வறுமை படிப்படியாக அதிகரித்தல்
(4) அடிக்கடி பூமியதிர்வு ஏற்படல்

19. கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் சட்டத்தினால் பின்வரும் எத்தரப்பினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது?
(1) பெண்கள் உரிமைகள்
(2) பிரசைகளின் உரிமைகள்
(3) தொழிலாளர் உரிமைகள்
(4) சிறுவர் உரிமைகள்

20. யுத்த நோக்கத்தைக் கொண்டு உருவான சர்வதேச அமைப்பு யாது?
(1) சார்க் அமையம்
(2) ஆசியான் அமைப்பு
(3) ஐரோப்பிய ஒன்றியம்
(4) நேட்டோ அமைப்பு

[பக். 3 ஐப் பார்க்க

**21.** நல்லாட்சி முறையில் கருத்திற்கொள்ளத்தக்க அரசியல் காரணி பின்வருவனவற்றுள் யாது?
(1) ஏனையோரின் கலாசாரங்களை மதித்தல்
(2) விரும்பிய சமயத்தைப் பின்பற்றல்
(3) விரும்பிய அரசியல் கருத்தைக் கொண்டிருத்தல்
(4) தொழிற்சங்கத்தை அமைத்தல்

**22.** மோதல் தீர்வில் 'மத்தியஸ்தம் வகிக்கும் முறை'யைப் பின்வரும் எவ்வகை மோதலைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தலாம்?
(1) நபர்களுக்கிடையிலான மோதல்
(2) இனங்களுக்கிடையிலான மோதல்
(3) நாடுகளுக்கிடையிலான மோதல்
(4) சமயங்களுக்கிடையிலான மோதல்

**23.** உலகமயமாக்கலில் அவதானிக்கத்தக்க சிறப்பியல்பாவது,
(1) சொத்துரிமை பொதுவாகவிருத்தல்
(2) வேலையுலகம் விரிவடைதல்
(3) உலக சந்தை குறுகுதல்
(4) நிதி நெருக்கடி ஏற்படல்

**24.** எந்தவொரு பண்பாட்டிலும் அவதானிக்கத்தக்க பண்புகளைச் **சரியாகக்** காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) சமயம், மொழி, கலை, பற்றுறுதி, நம்பிக்கைகள்
(2) சமயம், மொழி, கலை, பற்றுறுதி, காற்று
(3) சமயம், மொழி, நீர், பற்றுறுதி, நம்பிக்கைகள்
(4) சமயம், மொழி, கலை, காலநிலை, நம்பிக்கைகள்

**25.** கடல்சார் நீதிமன்ற அதிகாரத்தைக் கொண்டுள்ள நீதித்துறை தாபனம் பின்வருவனவற்றில் எது?
(1) உயர் நீதிமன்றம்
(2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம்
(4) மாவட்ட நீதிமன்றம்

**26.** நாட்டில் நல்லாட்சி நிலவுவதன் விளைவாக ஏற்படும் முக்கிய அனுகூலம்,
(1) நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் இடம்பெறுதல்
(2) இலாபம் பகிரப்படுதலில் உள்ள வேற்றுமை குறைதல்
(3) உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடைதல்
(4) இனக் குழுக்களுக்கிடையே நம்பிக்கையேற்படல்

**27.** மத்தியரசாங்கம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் பிரசைகள் நிறைவேற்ற வேண்டிய கடமை யாது?
(1) பயன்மிக்க சீவனோபாயத்தில் ஈடுபடல்
(2) சமூக ஒருங்கிணைவை ஏற்படுத்தல்
(3) கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல்
(4) தேசப்பற்றை மேம்படுத்தல்

**28.** பின்வருவனவற்றுள் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமையைக் குறிப்பிடும் விடை யாது?
(1) சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் உரிமை
(2) சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்யும் உரிமை
(3) தனிப்பட்ட சொத்துக்களைக் கொண்டிருப்பதற்கான உரிமை
(4) தனிப்பட்ட பாதுகாப்புக்கான உரிமை

**29.** பொருளாதாரமொன்றில் இடம்பெறும் செயன்முறைகளை **சரியான ஒழுங்கில்** குறிப்பிடும் விடை யாது?
(1) உற்பத்தி, விநியோகம், நுகர்வு
(2) உற்பத்தி, நுகர்வு, விநியோகம்
(3) விநியோகம், உற்பத்தி, நுகர்வு
(4) நுகர்வு, விநியோகம், உற்பத்தி

**30.** பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, கல்வி, கொள்வனவு சக்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படும் சுட்டி யாது?
(1) தனிநபர் வருமானச் சுட்டி
(2) மனித அபிவிருத்திச் சுட்டி
(3) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி
(4) மனித வறுமைச் சுட்டி

**31.** காலநிலை மாற்றத்தினால் சூழலில் ஏற்படும் ஒரு **தீய** விளைவைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) உணவுச் சங்கிலி சீர்குலைதல்
(2) ஒட்சிசன் வாயுப் பற்றாக்குறை ஏற்படல்
(3) தூசுப் படலம் ஏற்படல்
(4) கடல் நீர் மட்டம் அதிகரித்தல்

[பக். 4 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

28401

**32.** சர்வதேச உறவுகளைப் பேணுவதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் நோக்கம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) சர்வதேச அமைப்புகளில் நிரந்தர உறுப்பினராதல்
(2) சக்தி வாய்ந்த அரசுகளின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்புப் பெறல்
(3) தனியாக அடைய முடியாதவற்றைக் கூட்டாக அடைதல்
(4) பாதுகாப்புசார் கொள்கைகளிலேற்படும் தடைகளுக்கு முகம்கொடுத்தல்

**33.** தொழில் வழங்குநர் - தொழில் புரிபவர் ஆகிய இரு தரப்பினரிடையே ஏற்படும் தொழிற் பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான முறை
(1) மத்தியஸ்தம் வசித்தல் (2) இணக்கப்படுதல்
(3) தலையிடல் (4) ஆலோசனை வழங்கல்

**34.** மாகாண சபை முறையில் மத்தியரசுக்கும் மாகாண சபைக்குமிடையே தொடர்பேற்படுவது
(1) மாகாண ஆளுநர் மூலம் (2) மாகாண முதலமைச்சர் மூலம்
(3) மாகாண பிரதம செயலாளர் மூலம் (4) மாகாண அமைச்சரவை மூலம்

**35.** போட்டித் தன்மை வாய்ந்த கட்சி முறையில் அவதானிக்கத்தக்க சிறப்பியல்பாவது.
(1) நிறைவேற்றுத்துறையை பதவி நீக்குவதற்கு கட்சித் தலைவர்களுக்கு இயலுமாதல்
(2) மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யக் கூடியதாகவிருத்தல்
(3) இனங்களுக்கிடையிலான மோதலைத் தவிர்த்தல்
(4) தன்னிச்சையான ஆட்சியாளர் தோன்றுவதைத் தவிர்த்தல்

**36.** அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் மிக முக்கிய பணி யாது?
(1) ஓர் இனத்துக்கான ஓர் அரசை நிறுவுதல்
(2) அனைத்து இனத்தவர்களினதும் ஆக்கத்திறனை மேம்படுத்துதல்
(3) நீதியையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்
(4) இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்

**37.** மாகாண சபையொன்றின் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையினது பணிகளாவன
(1) அவசர சூழ்நிலைகளில் சனாதிபதியின் ஆலோசனைகளுக்கமைவாகச் செயற்படல்
(2) மத்திய அரசின் பிரதிநிதியாகச் செயற்படல்
(3) மாகாண பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிருவாகத்தைத் திட்டமிடல்
(4) மாகாண வீதி அபிவிருத்தியை மேம்படுத்தல்

**38.** தேசிய சூழல் சட்டத்துக்கமைவாக சூழல் பாதுகாப்பு பற்றி பொறுப்புக்கூறத்தக்க முக்கிய நிறுவனம் எது?
(1) சூழல் பாதுகாப்பு அமைச்சு (2) மத்திய சுற்றாடல் அதிகாரசபை
(3) வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் (4) கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

**39.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - விவசாய நடவடிக்கைகளை நவீனமயமாக்கலினால் அறுவடை அதிகரிக்கும்.
B - மனித முன்னேற்றத்தின் விளைவாக இயற்கைச் சூழலில் கைத்தொழிற் கழிவுகள் சேர்தல் அதிகரித்துள்ளது.

மேற்படி கூற்றுகளில்
(1) A உண்மையானது B பொய்யானது. (2) A பொய்யானது B உண்மையானது.
(3) A, B ஆகிய இரண்டும் பொய்யானவை. (4) A, B ஆகிய இரண்டும் உண்மையானவை.

**40.** 'அ' நிரலில் இலங்கையில் நடைமுறையிலுள்ள நீதிமன்றங்களும் 'ஆ' நிரலில் அந்நீதிமன்றங்களினால் தீர்க்கவேண்டிய வழக்குகளும் தரப்பட்டுள்ளன. 'அ' மற்றும் 'ஆ' நிரல்களைப் பொருத்தி விடையைத் தெரிக.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. உயர் நீதிமன்றம் | A - கொலை வழக்கு |
| 2. மேன்முறையீட்டு நீதிமன்றம் | B - விவாகரத்து வழக்கு |
| 3. மேல் நீதிமன்றம் | C - சனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு |
| 4. மாவட்ட நீதிமன்றம் | D - அரச ஊழியர் வழக்கு |
| 5. மஜிஸ்திரேட் நீதிமன்றம் | E - பாராளுமன்ற தேர்தல் ஆட்சேபனை வழக்கு |

(1) ABCDE (2) BCDEA (3) CEABD (4) DEACB

[பக். 5 ஐப் பார்க்க

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

## குடியியற் கல்வி II

※ **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
※ **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (i) நாட்டை அரசியலமைப்புக்கமைய ஆட்சி செய்வதனாலேற்படும் நன்மைகள் **இரண்டினை** எழுதுக.
   (ii) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13 வது திருத்தத்திற்கமைவாக அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள பட்டியல்களில் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (iii) பல்பண்பாட்டு சமூகத்தில் அவதானிக்கத்தக்க அடிப்படைப் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (iv) மனிதத் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற முயலுகையில் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் **இரண்டினைத்** தருக.
   (v) மோதலேற்படுவதற்குக் காரணமான முக்கிய அடிப்படைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (vi) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிவகைகள் **இரண்டினைத்** தருக.
   (vii) உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கான முக்கிய தலைப்புகள் **இரண்டினை** எழுதுக.
   (viii) உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (ix) சூழல் தொகுதியின் கூறுகளில் சமூகச் சூழலுக்குரிய **இரண்டு** கூறுகளைத் தருக.
   (x) சர்வதேச உறவுகள் இடம் பெறும் முக்கிய முறைகள் **இரண்டினைத்** தருக.
   (02 × 10 = 20 புள்ளிகள்)

2. நாட்டில் சட்டத்தை நியாயமாகவும் முறையாகவும் அமுல்படுத்தினால் சமூகம் இயல்பாகவே சட்டத்திற்கு மதிப்பளிக்கும்.
   (i) சட்டம் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** சட்டம் சார்ந்த மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) பிரதம நீதியரசரால் ஒழுங்குவிதிகள் இயற்றப்படும் துறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (*a*) சட்டத்தின் ஆட்சி நிலவும் சமூகத்தில் அவதானிக்கத்தக்க பண்புகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)
   (*b*) மேலே குறிப்பிட்ட ஏதேனுமொரு பண்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தினை விளக்குக. (03 புள்ளிகள்)

3. நேரடியாக அன்றேல் மறைமுகமாக ஆட்சி நடவடிக்கைகளில் பொது மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் ஆட்சி முறை சனநாயக ஆட்சி முறையாகும்.
   (i) அரசாங்கத்தில் அவதானிக்கத்தக்க முக்கிய நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) சனநாயக ஆட்சியில் அவதானிக்கத்தக்க பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (*a*) தற்காலத்தில் நேரடி சனநாயக முறையை நடைமுறைப்படுத்துவது சிக்கலாக இருப்பதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (*b*) அவற்றுள் **ஏதேனுமொரு** காரணத்தை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் **மூன்றினை** விளக்குக. (03 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

**4.** பன்மொழிகளைப் பேசுகின்ற பன் மதங்களைப் பின்பற்றுகின்ற, பல்வேறு மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் பேணுகின்ற மக்கள் ஒன்றாக வாழ்தலை பன்மைப்பண்பாட்டு சமூகம் எனலாம்.

(i) இலங்கையில் பன்மைப்பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணியான குடிப்பெயர்வுக்கான உதாரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) மாணவராக நீங்கள் இரண்டாம் மொழியைக் கற்பதனால் அடையும் பயன்கள் **மூன்றினை** எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) பன்மைப்பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சி நடைபெறுவதால் மக்கள் அடையும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) அவற்றுள் **ஏதேனுமொன்று** சமூக நன்மைக்கு ஏதுவாயமையும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

**5.** மனித மனதில் உருவாகும் நோக்கங்கள், நலன்கள் மற்றும் தேவைகளின் பல்வகைமைக்கேற்ப மோதல் ஏற்படலாம்.

(i) அரசினுள் அல்லது இரண்டு அரசுகளுக்கிடையே ஏற்படத்தக்க மோதல்களுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(ii) நடுநிலையாளரைத் தெரிவுசெய்கையில் விசேடமாகக் கருத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) மோதல் தீர்வின் போது பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய தனியாள் பண்புகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) அவற்றுள் **ஒரு** பண்பின் மூலம் மோதலைத் தீர்க்கும் விதத்தினைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

**6.** மனிதர்கள் மாண்புடனும் சமத்துவத்துடனும் சமூகத்தில் வாழ்வதற்கு மனிதவுரிமைகள் உதவுகின்றன.

(i) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயங்கள் (ICCPR) மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள **இரண்டு** உரிமைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பெண்களுக்கெதிரான அனைத்து வகை பாரபட்சங்களையும் ஒழித்துக்கட்டும் முகமாக ஏற்படுத்தப்பட்ட சமவாயத்திற்கமைவாக (CEDAW) பெண்களுக்குரித்தான உரிமைகள் **மூன்றினைத்** தருக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வழிவகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) பாடசாலை மாணவராக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் **மூன்றினை** சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

**7.** எம்மைச் சூழவுள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்தும் சூழலுக்குரியதாகையினால் சூழலைப் பாதுகாத்தல் மனித நிலவுகைக்கு காரணமாகின்றது.

(i) இயற்கை நிகழ்வுகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நீர் மாசடைவதற்கான காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) நீர் மாசடைதலைத் தவிர்ப்பதற்கு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிவகைகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) நீர் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினைகள் **மூன்றினை** விளக்குக. (03 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]




කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**